# ‘திராவிட மாடல்’ அரசு,

# பெண்களின் முன்னேற்றத்துக்கான அரசாகவே தொடர்ந்து செயல்பட்டு வருகிறது!

## இராணிப்பேட்டையில் நலத்திட்ட உதவிகளை வழங்கி — துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**இராணிப்பேட்டை, நவ. 5 -**

**இராணிப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், 50,000 மகளிர் உட்பட மொத்தம் 73,000 பயனாளிகளுக்கு ரூ.296 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். மேலும், ரூ.44 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்து, ரூ 25 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.**

**அப்போது அவர், ``நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து பெண்களின் முன்னேற்றத்துக்கான அரசாகவே தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -**

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இராணிப்பேட்டை மாவட்டத்தில், 73 ஆயிரம் பேருக்கு, இந்த அரங்கத்தில் மட்டும் 22 ஆயிரம் பேருக்கு, 300 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை உங்களுக்கு வழங்கி, உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு அளித்த உங்களின் மாவட்ட அமைச்சர் அண்ணன் இராணிப்பேட்டை காந்தி அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் முதலில் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மாவட்ட மாநாடு

அண்ணன் காந்தி அவர்கள் பேசும் போது, இது மிக குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி என்று சொன்னார். இந்த நிகழ்ச்சியை கிட்டத்தட்ட ஒரு மாவட்ட மாநாடு போல சிறப்பாக ஏற்பாடு செய்தமைக்கு முதலில் எனது பாராட்டுகள், வாழ்த்துகள். இந்த மாவட்டத்துக்குப் பெயரே `ராணி”ப்பேட்டை. நம் தமிழ்நாட்டில் ராஜாக்கள் பெயரில் நிறைய ஊர்கள் இருக்கலாம். ஆனால், ராணியின் பெயரில் இருக்கும் மிகச் சில ஊர்களில் மிக மிக முக்கியமான ஊர் இந்த இராணிப்பேட்டை.

அதனால்தானோ என்னவோ, இந்த விழாவில் ராஜாக்களை விட ராணிகள் அதிகமாக இருக்கிறீர்கள். எனவே, இந்த இராணிப்பேட்டையில் ராணிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை இராணிப்பேட்டை காந்தி அவர்கள் ஏற்பாடு செய்து, இதில் நான் கலந்து கொள்ளும் வாய்ப்பை உருவாக்கி கொடுத்துள்ளார்.

73 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் கொடுக்கிறோம் என்றால், அதில் 55 ஆயிரம் பேர் பெண்கள்தான் என்பதை சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிகழ்ச்சியில் மட்டுமல்ல, பொதுவாகவே, நம் ஆட்சி அமைந்தபிறகு, நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து பெண்களின் முன்னேற்றத்துக்கான அரசாகவே தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது.

### திட்டத்தின் வெற்றி

பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற வேண்டும். யாரையும் எதிர்பார்க்காமல் அவர்களின் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். நம் அரசு கொண்டு வந்த திட்டங்களை எல்லாம் பார்த்தாலே உங்களுக்குத் தெரியும். ஆட்சிக்கு வந்தவுடன் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்துக்குத்தான் முதல் கையெழுத்திட்டார்கள். இன்றைக்கு அந்த திட்டத்தின் மூலம், தமிழ்நாடு முழுவதும் இந்த நான்கரை வருடத்தில் 820 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். குறிப்பாக, இந்த இராணிப்பேட்டை மாவட்டத்தில் மட்டும் 8 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். இதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றி.





**“மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு அடையாள அட்டைகளை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தி உள்ளார்கள். இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திலும் இது கிடையாது. இந்த மேடையில் கூட உங்களுக்கான அடையாள அட்டைகளைக் கொடுக்க இருக்கிறோம். இது வெறும் உங்களின் அடையாள அட்டை மட்டும் கிடையாது. உங்களின் அடையாளத்தை மாற்றப் போகிற அட்டை என்பதை நீங்கள் உணர வேண்டும்.”**

### மகளிர் உரிமைத் தொகை

அரசுப் பள்ளியில் படித்த மாணவ - மாணவிகளுக்கு, உயர்கல்வியில் சேரும் போது, தமிழ்ப்புதல்வன் - புதுமைப்பெண் திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தினார். இந்தத் திட்டங்கள் மூலம் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இந்த இராணிப்பேட்டை மாவட்டத்தில் மட்டும் 16 ஆயிரம் மாணவ - மாணவிகளுக்கு இந்தக் கல்வி உதவித்தொகையை நம் அரசு வழங்கி வருகிறது.

### காலை உணவுத் திட்டம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒவ்வொரு நாளும் சுமார் 22 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். இந்த இராணிப்பேட்டை மாவட்டத்தில் மட்டும் 25 ஆயிரம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த ஒரு திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் கொடுத்தார். நாம் ஆட்சிக்கு வரும்போது கடும் நிதி நெருக்கடி இருந்தது. எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியாது என்று நம் விமர்சித்தார்கள். ஆனால் நம் தலைவர் அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பு செப்டம்பர் 15 ஆம் தேதி அந்தத் திட்டத்தை நிறைவேற்றினார்.

இந்தத் திட்டத்தின் கீழ், 1 கோடியே 20 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். 26 மாதங்களாக மகளிர் மாதம் 1,000 ரூபாய் பெற்றுள்ளார்கள். இந்த இராணிப்பேட்டை மாவட்டத்தில் மட்டும் ஒரு லட்சத்து 70 ஆயிரம் மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். வருகின்ற டிசம்பர் மாதம் முதல், இன்னும் கூடுதலான மகளிருக்கும், மகளிர் உரிமைத்தொகையைக் கொடுக்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கான அறிவிப்பை நான் தான் சட்டமன்றத்தில் வெளியிட்டேன்.

நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களைப் பார்த்து, பஞ்சாப் முதலமைச்சர் பாராட்டுகிறார், தெலங்கானா முதலமைச்சர் அவர்கள் பாராட்டியுள்ளார். இப்படி பல வகையில், இந்தியாவுக்கு எடுத்துக் காட்டான மாநிலமாக, எடுத்துக் காட்டு முதலமைச்சராக நம் முதலமைச்சர் அவர்கள் நம் மாநிலத்தை வழிநடத்திக் கொண்டு இருக்கிறார்.

குறிப்பாக, இங்கு ஏராளமான மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் வந்து இருக்கிறீர்கள். நீங்கள் குழுவில் இருப்பதன் மூலம், மற்றவர்களுக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக உங்களின் செயல்பாடுகள் இருக்கின்றன. அதனால் தான், நம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு மட்டும் 50 ஆயிரம் பேருக்கு வங்கிக்கடன் இணைப்பைக் கொடுக்க உத்தரவிட்டுள்ளார்கள்.

### அடையாள அட்டை

அதுமட்டுமல்ல, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு அடையாள அட்டைகளை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தி உள்ளார்கள். இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திலும் இது கிடையாது. இந்த மேடையில் கூட உங்களுக்கான அடையாள அட்டைகளைக் கொடுக்க இருக்கிறோம். இது வெறும் உங்களின் அடையாள அட்டை மட்டும் கிடையாது. உங்களின் அடையாளத்தை மாற்றப் போகிற அட்டை என்பதை நீங்கள் உணர வேண்டும். அந்த அளவுக்கு அந்த அடையாள அட்டையில் பல பயன்கள் இருக்கிறது.

உங்களின் தயாரிப்புகளை, நீங்கள் அரசுப் பேருந்துகளில் 25 கிலோ எடை வரைக்கும் 100 கிலோ மீட்டர் தூரத்துக்குக் கட்டணமே இல்லாமல் எடுத்துச் செல்லலாம் என்ற சலுகையை நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குக் கொடுத்துள்ளார்கள்.

ஆகவே, இந்த அடையாள அட்டைகளை, நீங்கள் சிறப்பாக பயன்படுத்தி, பத்திரமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அடையாள அட்டைகளைப் பெற வந்துள்ள சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு என் அன்பையும், வாழ்த்தையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 19 லட்சம் வீட்டுமனை பட்டா

மகளிர் குழுக்களுக்கு மட்டுமல்ல, இங்கே 12 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாவை கொடுக்க இருக்கிறோம். உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்பதுதான் ஒரு மனிதனுக்கு அடிப்படை தேவை. அதில் இருக்க இடம் என்ற தேவையை நம் அரசும், முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து பூர்த்தி செய்து வருகிறார்கள்.

நம் அரசு அமைந்த இந்த நான்கரை வருடத்தில் மட்டும் சுமார் 19 லட்சம் வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. குடியிருக்கிற வீட்டுக்கு பட்டா வேண்டும் என்பது உங்களின் கோரிக்கை மட்டும் கிடையாது. அது உங்களின் உரிமை. உங்களின் உரிமையை நம் அரசு இன்றைக்கு உண்மையாக்கியுள்ளது. அதனால்தான், எப்போது ஆய்வுக் கூட்டம் நடத்தினாலும், பட்டா கேட்டு வருகிற மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

இன்றைக்கு மட்டும் இந்த மாவட்டத்தில் 12 ஆயிரம் பேருக்கு பட்டா கிடைக்கப்போகிறது. அந்த 12 ஆயிரம் பேரும் இன்றைக்கு உங்களின் வீட்டில் நீங்கள் நிம்மதியாக தூங்கலாம். உங்கள் இடத்துக்கான சட்டப்பூர்வ உரிமையை நம் அரசும், முதலமைச்சர் அவர்களும் செய்து காட்டியுள்ளார்கள். பட்டா வேண்டும் என்று நீங்கள் அரசு அலுவலகங்களுக்கு சென்ற காலம் மாறி, இன்றைக்கு அரசு உங்களைத் தேடி பட்டா வழங்க வந்துள்ளது.

அன்புக்கரங்கள் பயனாளி குழந்தைகள் இங்கு வந்துள்ளார்கள். உங்களுக்கு நம் அரசும், முதலமைச்சர் அவர்களும் எல்லா வகையிலும், துணை நிற்பார். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் உங்களின் படிப்பில் நீங்கள் கவனம் செலுத்துங்கள். உங்களின் கல்வி மிகமிக முக்கியம். விளையாட்டில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். உங்களைப் பார்த்துக்கொள்வதற்கு நம் முதலமைச்சர் அவர்கள் என்றைக்கும் துணை நிற்பார். இன்றைக்கு வீட்டுமனை பட்டா, கலைஞர் கனவு இல்லம், சுயஉதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை இப்படி பல்வேறு, நலத்திட்டங்களைப் பெற்றுள்ள உங்கள் அத்தனை பேரையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.


தமிழ்நாட்டை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல, தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பெருக்க, உங்களுக்காக தொடர்ந்து உழைக்க நம் முதலமைச்சர் அவர்களும், நம் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் தயாராக இருக்கிறோம். எனவே, இந்த வளர்ச்சி மென்மேலும் பெருக வேண்டும், அதற்கு எப்போதும் போல் உங்களுடைய ஆதரவு நம் முதலமைச்சருக்கும், நம் அரசுக்கும் தொடர வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் மாவட்டத்தின் அமைச்சர் அண்ணன் இராணிபேட்டை காந்தி அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் மீண்டும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், முனிரத்தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் சந்திரகலா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் தனலிங்கம், ஊரக வளர்ச்சித் துறை திட்ட இயக்குநர் சரண்யா தேவி, மகளிர் திட்டத்தின் திட்ட இயக்குநர் செந்தில்குமரன், வினோத் காந்தி மற்றும் சஞ்சனா, மௌத்திகா அரசு அதிகாரிகள் அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



திருச்சி கிழக்குத் தொகுதி மாநகராட்சி மண்டலம் ஒன்றிற்கு உட்பட்ட வார்டு எண் 21 மேலபுலிவார் சாலையில் அமைந்துள்ள தேவர் மஹாலில், ‘உங்களுடன் ஸ்டாலின் முகாம்’ நடைபெற்றது. அதனை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ., மண்டலக் குழுத் தலைவர் மு.மதிவாணன், மும்தாஜ் பேகம், தர்கா முபாரக், ராஜா மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு உயிரிப் பல்வகைமை வாரியத்தின் 12வது வாரியக் கூட்டம் வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் / வாரியத்தின் தலைவர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தலைமையில் நேற்று முன்தினம் (03.11.2025) நடைபெற்றது. இதில் அரசு அலுவலர்கள் திருமதி சுப்ரியா சாஹூ, வ. தட்சிணாமூர்த்தி, மிட்டா பானர்ஜி, ஆர். ஸ்ரீ நிவாஸ் ரெட்டி ராகேஷ் குமார் டோக்ரா மற்றும் வாரியத்தின் உறுப்பினர்கள், துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.